முருகப்பெருமான் துணை

**மகான் கௌதமர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.06.2023, சனிக்கிழமை

1. ஆறுமுகனார் அவதார வடிவே
   அண்ணலே ஞான வள்ளலே
   மாறுதலை உலகினில் நடத்திட
   மாதவசியாக வந்தநல் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அறிவிப்பேன் அறிவுரை ஆசி
   வரங்களென சோபகிருது விடைதிங்கள்
   வழங்குவேன் இருபானேழ் திகதிகாரி வாரம்
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 27ம் நாள், 10.06.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் கௌதமர் யானும்
   வையகம் உயர்வுபெற உரைப்பேன்
   சோரம் போக்கி கலியுகத்தில்
   சுபிட்சம் படைக்க வந்த ஞானி
4. ஞானியரின் நன்னெறிகள் தனை
   நம்பிக்கை வைத்து மக்கள்வர
   துணிவுபட உலகம் எங்கிலும்
   தொய்வில்லா மாற்றம் நிகழும்
5. நிகழும் தரும சேவையாக
   நீதி நெறிவழி நடப்புமாகி
   அகிலம் பாதுகாப்பை பெறும்
   ஆக்கினையான துன்பம் விலகி
6. விலகியே உலக மாற்றமாக
   வினவிட அனைத்தும் நடக்கும்
   காலமதில் தருமவான்கள் நிறைந்த
   கண்ணியமிக்க இணைவு கூடி
7. கூடியே எங்கும் எதிலும் மாற்றம்
   குருகடாட்சமாக நடந்தேறும்
   இடர்களை வெல்லும் ஞானி
   ஏழ்மையை விரட்டும் ஞானி

8. ஞானி அரங்கன் திருவடி
நம்பிக்கையூட்டும் ஞானத்திருவடி
தானாக உலகோர் சரணடைந்து
தரும வழிக்கு வருதல் காண
9. காணவே தயவுநிலை பெருகி
கருணைமிக்க அதிகார வர்க்கம்
ஞானத்தலைமை வழிகாட்டலில்
நாடெங்கிலும் செயல்பாடுகள் சிறந்து
10. சிறந்துமே ஞானிகள் ஆட்சி
செகம் தன்னில் அரங்கன் ஆசிபட
பரந்து விரிந்த பாரதம் துவங்கி
பாருலகமே ஞானத்தலைமைக்கு கீழ் வந்து
11. வந்துமே அரங்கன் நோக்கம்
வரலாறு காண வெற்றியாகும்
செந்தூரான் தலைமை காணும்
செப்பிய அறிவுரை ஆசிமுற்றே

—சுபம்—